(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 61.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, திசெம்பர் 07, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0231/ '10

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்கல்ல வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய தங்கல்ல கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii)அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்குச் சமர்ப்பீரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0314/ '10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இந்நாட்டிலிலுள்ள அராசங்க மற்றும் அரசாங்கத்துடன் தொடர்புடைய பாடசாலைகளில் உள்ள ஆங்கில ஆசிரியர்களின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களுக்கு மாதமொன்றுக்கு வழங்கப்படும் தொகையையும்,

(iii) அவர்களுக்குரித்தான ஏனைய நன்மைகளையும்,

(iv) இலங்கையில் ஆங்கில ஆசிரியர்களுக்கான தேவையை மாவட்ட ரீதியாகவும்,

(v) ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக் குறையை நீக்குவதற்கென மேற்கொள்ளப் படுகின்ற நடவடிக்கைகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையைச் சேர்ந்த இரண்டாயிரம் ஆங்கில ஆசிரியர்கள் கொரிய நாட்டிற்கு அனுப்பப்படுவர் எனும் ஆலோசனையை அல்லது கூற்றை அவர் ஏன் தெரிவித்தாரெனவும்,

(ii) இந்நடவடிக்கையால் இலங்கைக்குக் கிடைக்கவுள்ள நன்மையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0712/ '10

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிங்கங்கைத் திட்டம் என்ற பெயரில் நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) அவ்வாறாயின், அதற்கு உட்படும் பிரதேசங்கள் மற்றும் ஆபத்தான பிரதேசங்கள் யாவையென்பதையும்,

(iii) குறித்த பிரதேசங்களில் இடம்பெயரும் மக்கள் தொடர்பாக எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iv) இவர்களை மீளக் குடியமர்த்த எதிர்பார்த்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்,

(v) இவர்களுக்கு இழப்பீடு வழங்கும் அடிப்படை யாதென்பதையும்,

(vi) கிங்கங்கைத் திட்டம் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0830/ '10

4.

கௌரவ விக்டர் அன்ரனி,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மீனவ மக்களுக்கு உயர் சமூக அந்தஸ்தினைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு கடற்றொழில் வளமூலங்களை மேம்படுத்தல், கடற்றொழில் வசதிகளை முன்னேற்றல், விற்பனை வசதிகளை வழங்கல் மற்றும் மீனவ மக்களது சிக்கனம் தொடர்பிலான அறிவை வளர்த்தல் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பாக நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கடற்றொழில் மந்தமான காலத்தில் மீனவ மக்களது பொருளாதாரத்தை நீடுறுதியாகப் பேணுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்று நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கருவாடு உலர்த்துதல், மீனை ஜாடிகளில் இட்டு பதப்படுத்துதல், விலங்கு உணவு உற்பத்திக்காக மீன்களைப் பதப்படுத்தல், பனையோலையிலான பொருட்களை தயாரித்தல், தையல் வேலைகள் மற்றும் சிப்பிகளால் அலங்காரப் பொருட்களை உற்பத்தி செய்தல் ஆகிய வாழ்வாதாரங்களுக்கு மீனவப் பெண்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) மேற்படி உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0232/ ‘10

5.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வலஸ்முல்ல வலயக் கல்விக் காரியலத்திற் குட்பட்ட கட்டுவென கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்திற்குரிய பாடசாலைகளில் மிகையான ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அவ்வாறான பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iv) பற்றாக்குறை நிலவுவது எந்தப் பாடங்களுக்கு என்பதையும்,

(v) இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0445/ ’10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இற்றைவரையான ஐந்து வருடங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக சென்றவர்களின் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்பவர்கள் ஒரு காப்புறுதித் திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், அத்தகைய காப்புறுதிக் காப்பீடொன்றிற்கு ஒருவரிடமிருந்து எவ்வளவு தொகை அறவிடப்படுகின்றதென்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) கடந்த ஐந்து வருடங்களில் விடுக்கப்பட்ட இழப்பீட்டுக் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கையை அவர் தெரிவிப்பாரா?

(உ) காப்புறுதிப் பத்திரத்திற்கான கட்டணங்களை செலுத்திய போதும் மக்களுக்கு ஏன் இழப்பீடு கிடைப்பதில்லை என்பதை அவர் விபரிப்பாரா?

(ஊ) இன்றேல், என்?

0713/ '10

7.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்த "கரதியவர மங்கல்ய" எனும் வைபவத்திற்காக செலவிடப்பட்ட முழுத்தொகை எவ்வளவென்பதையும்,

(ii) குறித்த வைபவத்தின் அரங்க நிகழ்ச்சிக்கு பொறுப்பாகவிருந்த நபர் அல்லது நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்,

(iii) குறித்த பணிகள், நிறுவனமொன்றினால் நிறைவேற்றப்பட்டிருப்பின், அதன் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iv) குறித்த நிறுவனம் அல்லது நபருக்குச் சொலுத்தப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0831/ '10

8.

கௌரவ விக்டர் அன்ரனி,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உவர் நீர் மற்றும் களப்புகளில் மீன் பிடிப்பதற்காக தடை செய்யப்பட்ட வலைகள் பயன்படுத்தப்படுவதன் காரணமாக மீன் குஞ்சுகள் அழிவடைவதால் மீன் வளம் குறைவடைந்துள்ளதென்பதையும்,

(ii) இதன் காரணமாக மீனவர்களால் போதியளவு மீன் வளத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது பயன்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட அனைத்து வகை வலைகளையும் கைப்பற்றுவதற்கும், தடைசெய்யப்பட்ட வலை வகைகளின் பாவனையை முற்றாக நீக்குவதற்கும் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் யாவையென்பதையும்,

(ii) தடைசெய்யப்பட்ட வலை வகைகளை பாவனைக்கு எடுக்காதிருப்பதற்கும், அழிப்பதற்கும் இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) உவர் நீர், சவர் நீர் (களப்பு) மீன்களைப் பெருக்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(ii) தடைசெய்யப்பட்ட முறைசாரா வலை பாவனை முறையால் அழிவடைந்துள்ள இயற்கை மீன் இனப்பெருக்க நிலையங்களைப் பாதுகாப்பதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iii) மீன் இனப்பெருக்கத்திற்கென விஷேட வலயங்களை ஒதுக்குவதற்கு கருதுகின்றாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) — (ஒதுக்கப்பட்ட பதின்மூன்றாம் நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, திசெம்பர் 06)

*2.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— 1956 ஆம் அண்டின் 47 ஆம் இலக்க, பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களை தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 20அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 31 ஆம் பிரிவின் கீழ், அச்சட்டத்தின் 20அ ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்க, தொழில் உறவுகள், விளைவுப்பெருக்க மேம்பாட்டு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2010, ஓகத்து மாதம் 20 ஆம் திகதி 1667/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2010.11.09ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*3.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ், காணி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 2005 நவம்பர் மாதம் 23ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட “நில அளவைச் சபை—2005 (வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப்பத்திரங்கள்)” பிரமாணங்களின் 3 ஆம் பந்தியை திருத்துவதற்காக 2009, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1633 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

*4.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நில அளவைச் சட்டத்தின் 39ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65ஆம் பிரிவின் கீழ், காணி, காணி அபிவிருத்தி, குடியிருப்பு மற்றும் போர் வீரர் நலனோம்புகை அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2005, நவெம்பர் மாதம் 23 ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட “2005 நில அளவைச் சபை (பதிவு) பிரமாணத்தின்” 2(2) ஆம் பந்தியை திருத்துவதற்காக 2010, ஏப்பிரல் மாதம் 12 ஆம் திகதிய 1649/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2010.11.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

*5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*6.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

மத்தியஸ்த்த சபைகள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

13.

பின ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்ட மூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

இலங்கை செமட்ட செத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

மகேஸ்வரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2011) என்னும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களளைத் “தினப்பணிக்கான அனுபந்தம்” என்னும் தனியிதழிற் காண்க.

---